தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும், அதனால் பயன்பெறும் கிராமங்கள் எத்தனை என்பதையும் அறிய விரும்புகிறேன். வருகின்ற 2003 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குள் இத்திட்டம் முடிவுறும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அதனால் பயன்பெறும் கிராமங்களின் விவரங்களைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாங்கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றி தனியாகக் கேள்வி கேட்டால் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 41, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

41–

விடுதிக் கட்டடம்

***15400–திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரி கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், உவரியில் இயங்கும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதிக்கு ரூ. 31.50 இலட்சம் செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்

விடுதி, பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஆகியவற்றில் மாணவர்கள் தங்கியிருந்து படிப்பதற்கேற்ற சூழல் இல்லாமல் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்தன. இந்த அரசு பொறுப்பேற்றதும், அவற்றுக்கு நல்ல கட்டடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் ஒரு பகுதியையும், மத்திய அரசு, மாநில அரசு நிதியுடன் இணைத்து, மாணவ, மாணவிகள் தங்கும் விடுதிகள் சிறப்பாக இருக்க வேண்டுமென்பதற்காக, நல்ல கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்டங்களைத் தந்த இந்த அரசுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகள், என்னுடைய தொகுதியில் உவரி, கூட்டப்புளி ஆகிய இரண்டு கிராமங்களுக்கு தந்ததற்காக இந்த அரசுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுபோன்று, மிகவும் மோசமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிற பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதியான பனகுடி, வடக்கன்குளம், ஆவரைக்குளம், பழவூர், இராதாபுரம், பெட்டைக்குளம், திசையன்விளை, சமூகரங்கபுரம் ஆகிய கிராமங்களில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கெல்லாம் தனிக் கேள்விதான் போட வேண்டும்.

திரு. மு. அப்பாவு: வாடகைக் கட்டடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர்கள் விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றிற்கு நடப்பு நிதியாண்டில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். கட்டடங்கள் கட்டுவதற்குத் தயாராக நிலத்தையும் இலவசமாகக் கொடுத்திருக்கிறோம். ஆவரைக்குளத்தில் அந்தப் பள்ளி நிர்வாகமே ஒரு இலட்சம் ரூபாய் செலவில் நிலத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டில் இந்த 8 மாணவர் விடுதிகளுக்கும் அரசு புதிய கட்டடங்கள் கட்டித் தர முன்வருமா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றவுடன், நான் 2 நாட்கள் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதி மற்றும்

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய மாணவ, மாணவியருக்கு இயங்கி வருகின்ற விடுதிகள் பற்றிய ஆய்வு நடத்தினேன். அப்போது, அந்த ஆய்வின்போது, பெரும்பாலான இத்தகைய மாணவ, மாணவியர் விடுதிகள், வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன என்பது தெரிய வந்தது. மேலும், பெரும்பாலான இத்தகைய மாணவ, மாணவியர் விடுதிகளில் மின்சாரம் இல்லை, குடி தண்ணீர் வசதி இல்லை, சுகாதார துப்புரவு வசதிகள் இல்லை என்பதெல்லாம் தெரிய வந்தது. ஆகவே, இதற்கு ஒரு crash programme, ஓர் அவசரத் திட்டம் ஒன்றை வகுத்து, இரண்டு ஆண்டுகளுக்குள் ஆதிதிராவிட மாணவ, மாணவியருக்கும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்கும் இயங்கி வருகின்ற விடுதிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களாகக் கட்டப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான நிதியும் ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்காகத்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் ஒரு பங்கை எடுத்துக்கொண்டு, இதை மிகவும் சிரத்தையுடன் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமன்றி, தமிழகம் முழுவதிலும், மோசமான நிலையில், வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற இத்தகைய மாணவ, மாணவியர் விடுதிகள் அனைத்தும் இரண்டாண்டுகளுக்குள் எல்லா வசதிகளுடன் சொந்தக் கட்டடங்களாகக் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 42, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

42–

ஆக்கிரமிப்பு

***18005–திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வக்ஃபு வாரியச் சொத்துக்களை எந்தெந்த மாவட்டங்களில் ஆக்கிரமித்து அனுபவித்து வருகிறார்கள் என்று அரசு கண்டறிந்துள்ளது?